# ★ புலிகளுடனுன யுத்தத்தைத்தொடர ஜனுதிபதி படைத் தளபதிகளின் ஒத்துழைப்பை கோருகிறுர்

(கொழும்பு) வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை தொடர படைத்தள பதிகள் அனைவரினதும் ஒத்துழைப்பை ஜனுதிபதி பிரேமதாஸா கோரியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 4 இதழ் 252
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20 — 10 — 1992

## பொலநறுவை எல்லைக்கு ஜனுதிபதி விஜயம்

(கொழும்பு) பொலநறுவை எல்லை பகுதியில் கடந்த வாரம் காலைச்சம்பவங்கள் இடம் பெற்ற கிராமங்களுக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்க்கு சம்பள உயர்வு

(கொழும்பு) அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவை ஈடுசெய்யும் விதத்தில், இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

# மன்னுரில் புலிகள் தாக்குதல்

# 10க்கும் மேல் படையினர் பலி

## பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(மன்னுர்)

மன்னுரில் உயிலங்குளப்பகுதியில் உள்ள ஸ்ரீ லங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீதும் அதனையொட்டிய இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள வீடுகள் மீதும் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் பத்திற்கும்மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்துமுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் இரு இலகு இயந்திர துப்பாக்கிகள் உட்பட பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 11-55 மணியளவில் உயிலங்குளம் பகுதியில்உள்ள சூரியகட்டைக் காட்டுக்கும் இலந்தமோட்டைக்கும் இடையில் அமைந்துள்ள இந்த இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் தொடுத்தனர்.

25 நிமிட நேரம் நடந்த கடும் சமரின்போது இராணுவத்தினரின் நிலைகள் விடுதலைப புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன.

இந்த வெற்றிகரமான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று மன்னுரில் தாக்குதல் ஒன்றை கடந்த

(2ம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் சிக்கிய ஆயுதங்கள் விபரம்

(மன்னுர்) மன்னுர் தாக்குதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம்:

பி. கே. இலகு இயந்திரத் துப்பாக்கி-1, ஏ. கே. இலகு இயந்திரத் துப்பாக்கி-1,

(4-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதி வழக்கு ஜனவரி 16-ல் தீர்ப்பு?

(கொழும்பு) 1990ம் ஆண்டு க. பொ. த. (உயர்தர) பரீட்சையும் 91ம் ஆண்டு நடந்த விசேட பரீட்சையும் வெவ்வேறு கணி

(2-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிலை குறித்து

### பிரிட்டிஷ் அமைச்சருக்கு விளக்கம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் யுத்த நிலை குறித்து இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் அமைச்சர் திரு. மார்க் லெனேக்ஸ் போயிட்டுக்கு இலங்கைவெளியுறவு அமைச்சர் திரு. ஹரோல் ஹேரத் விளக்கமளித்துள்ளார்.

வடக்கு நிலை குறித்து பிரிட்டிஷ் அமைச்சர் வினவிய போதே திரு. ஹேரத் யுத்த நிலை குறித்து விளக்கமளித்தாராம்.

இதேவேளை இலங்கைக்கான பொருளாதார உதவிகளை வழங்க பிரிட்டிஷ் அரசு மீண்டும் முன்வந்துள்ளதும் தெரிந்ததே. (ச)

## யுத்த விமானங்கள் வாங்க அதிகாரிகள் குழு செல்கிறது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா விமானப்படைக்கு சில யுத்த விமானங்களையும் நவீனரக ஹெலிகொப்டர்களையும் கொள்வனவு செய்ய விமானப்படை அதிகாரிகள் குழு ஒன்று மிகவிரைவில் ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்லவுள்ளது.

இக் கொள்வனவிற்காக ஐரோப்பா செல்லும் குழுவில் முன்னுள் படை உயர்அதிகாரி ஒருவரும் இடம்பெறுவாரென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விஜயத்தின்போது நவீனரக யுத்த ஹெலிகொப்டர்களின் கொள்முதலுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட

(4ம் பக்கம் பார்க்க)

## எல்லைப் பாதுகாப்பு படைக்கு 5000 பேரைத் திரட்ட முயற்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள சிங்களை, முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாப்பதற்கென, 5,000 பேரைக் கொண்ட தனியான 'எல்லைப் பாதுகாப்புப் படை' ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இப்படை அமைப்பதற்கு முன், உடனடிப் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கருத்திற் கொண்டு ஒவ்வொரு மாவட்டங்களிலும் மேலதிகமாக இருக்கும் ஊர்காவல் படைகளை, வடக்கு-கிழக்கு எல்லைக் கிராமங்களின் பாதுகாப்புக்கு அனுப்பி வைக்கவும் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

கிழக்குப் பாதுகாப்புக் குறித்து, நேற்று முன்தினம் கொழும்பின் கூடிய மாநாட்டிலேயே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது. (சி)

## மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகம் மற்றும் காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை சேர்ந்தவர்களிடமிருந்து இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2-15 தொடக்கம் 5-00 மணிவரை வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரியில் தமிழீழ மீட்பு நிதி பெற்றுக்கொள்ளப்படும்.

● அரசு-புலிகள் பேச்சு

## 'ஐலன்ட்' செய்திக்கு அரசு தரப்பில் மறுப்பு

(கொழும்பு)

அரசுடன் பேச்சுக்களை நடாத்த விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் இருவர் அவுஸ்திரேலியாவிலும், பிரிட்டனிலுமிருந்து கொழும்பு வந்திருப்பதாக 'ஐலன்ட்' பத்திரிகையில் வெளிவந்த செய்திக்கு அரசு தரப்பு மறுப்பு தெரிவித்துள்ளது.

அண்மைக்காலமாக அரசுக்கும் - புலிகளுக்குமிடையில் கொழும்பில் பேச்சுக்கள்

(2ம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவத்தினுள் இந்தியா ஊடுருவல் - பிரேமா அச்சம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தினுள் இந்தியா ஊடுருவல் செய்துள்ளதாக ஜனுதிபதி பிரேமதாஸா அச்சம் கொண்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில்; தென்னிலங்கை எதிர்க்கட்சிகளினுள் புகுந்து இந்தியா தனக்கெதிராக சொல்படுவது போல் இராணுவத்தினுள்ளும் செய்யமுற்படும், முற்படுகிறது என பிரேமதாஸா உணர்கிறுர்.

(2ம் பக்கம் பார்க்க)

கண்டல் மரங்களை காத்திடுவோம்
கடல் அரிப்பைத் தடுத்திடுவோம்

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகபுலம் சமதிதர் நோவு எண்ணெ கிடைக்கு மிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ். 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி—6888)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்கு மிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி—6848)

### குறைந்த சலார் குறித்த நேரம் தரன் ஸ்ருடியோ

தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92 — 27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலை கட்கு, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி—6878)

### தேவை

கோழிப் பண்ணை வேலை களுக்கு அனுபவம் உள்ளவர் கள் தேவை. நேரில் வரவும். திரு. ந. பத்மசோதி, கூட்டுற வு பரிசோதகர், நெல்லியடி. திக்கம் றோட், ஆலங்கட்டை யடி, வதிரி. (சி-6901)

### தீபாவளி வாழ்த்துக்கள்

எங்கள் ஸ்தாபனத்தில் தீபாவளி வாழ்த்துக்கள் மொத்தமாகவும், O/L, A/L மாதிரி வினாவிடைகள், பாட சாலை புத்தகங்கள் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள லாம். தினேஸ் புத்தகசாலை, 19, பஸ நிலையம், யாழ்ப்பாணம். (ஏ—2512)

## பாத்திரங்கள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையினை ஆ பகுதியில் முகாம்களில தங்கி யிருக்கும் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு சமையல் பாத் திரங்கள் இலவசமாக வழங் கப்பட்டு வருகின்றது. (72)

## நிறுவை அளவைகளுக்கு முத்திரையிடல்

(மானிப்பாய்)

யாழ் நிறுவைகள், அளவை கள் திணைக்களத்தினர் இன்று முதல் 23-ம் திகதி வரை கொடிகாமம் பிரதேச சபையில் வைத்து நிறுவைகள் அளவைகளுக்கு முத்திரையிட் டுக் கொடுக்கப்படுமென அறி வித்துள்ளனர்.

அப்பகுதியைச்சேர்ந்த சகல வர்த்தகர்களும் தமது நிறுவை அளவை உபகரணங்களை எடுத்துவந்து காலை 9 மணிக் கும் பிற்பகல் 1 மணிக்குமிடை யில் முத்திரையிட்டுச் செல்லு மாறு கேட்கப்பட்டுள்ளது. (71)

## இராசி பலன்

**20-10-1992**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு ஐப்பசி 04)**

நவமி பி. ப. 4-01 வரை, பூசம் காலை 8-23 வரை, இராகுகாலம் மாலை 3 02 முதல் 4-32 வரை சுப நேரம் காலை 10-32 முதல் 12-02 வரை சித்தயோகம்.

**மேஷம்**- நம்பிக்கை மோசம் மனத்துடிப்பு, தொழில் கஷ் டம்.

இடபம்- உறவினர் அன்பு, குடும்பசுகம், பாராட்டு.

மிதுனம்- தொழில் பிரச்னை, வம்பல் மாட்டுதல். அலைச் சல்.

கடகம்- கல்வியில் சாதனை, மனநிறைவு அதிர்ஷ்டம்.

**சிங்கம்**- ஆரோக்கியபாதிப்பு மனசங்கடம், சகோதர பகை.

கன்னி- களத்திரசுகம், தொழில் வெறுப்பு, கண் வலி.

துலாம்- பொதுப்பணி, தாயார் உதவி, பயணம்.

**விருச்சிகம்**- குடும்ப வறுமை வீண் குழப்பம், மனச்சுமை.

தனுசு- பிரிந்து வாழ்க்கை, சந்தோஷக் குறைவு, வெறுப்பு.

மகரம்- வாழ்க்கை வசதி, நண்பர் வருகை, பண வரவு

கும்பம்- மனைவியால் பெருமை, புதிய ஸ்தானம், தானதர்மம்.

மீனம்- அவால போஜனம், தாழ்ந்த நிலை, விதண்டா வாதம்

— ஜோஸ்யர்

## அரசு புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்து வருவதாக கொழும் புச் செய்திகளும் வெளிநாட்டு செய்திகளும் வெளியிடும் செய்திகளை இருதரப்பும் மறுத்து வருகின்றன

இதேவேளை புலிகளுடன் முக்கிய அமைச்சர் ஒருவர் பேச்சுக்களை நடத்திவருவதாக நாடாளுமன்றில் பிரஸ்தாபிக் கப்பட்டதும் தெரிந்ததே. (சி)

## இலங்கை இராணுவத்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு காலத்தில் இலங்கை இராணுவத்தை மிக மோச மாக சித்தரித்து வந்த இந் தியப்பத்திரிகைகள் தற்போது இலங்கைப்படைகள் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் சிறப்பாக செயல்படுவதாகவும் வெற்றி மேல் வெற்றி பெற்று வருவ தாகவும் புகழ்ந்து எழுதுகின் றன.

அதே நேரத்தில் பிரேம தாஸா எந்நேரமும் புலிகளு டன் கதைத்து விடக்கூடிய பேர்வழி எனவும் கோடிட்டு காட்டுகின்றன. இலங்கை இராணுவத்தை இந்தியா பல வழிகளிலும் அணுகுகிறது

இராணுவ தலைமைப்பீடத் தின கடும் போக்காளர்கள் கூட இந்தியாவை நட்புணர் வுடன் எதிரியின் எதிரி நண்பன் என்ற வகையில் நோக்குகின் றனர். அல்லது இந்தியாவை இத்தருணத்தில் பகைக்கக் கூடாது என்று கருதுகின்ற னர்.

இந்தியாவும் இம் மனோ நிலையை பயன்படுத்திக்கொள் ளத்தவறவில்லை. இலங்கை இராணுவம் பல பகுதிகளை விடுவித்து அகதிகளை மீளக் குடியமர்த்தக்கூடியசுமுகமான நிலையை சிறப்பாக உருவாக்கி வருகிறது என இந்தியா மிக மும்முரமாக தனது பத்திரி கைளூடாகவும் ராஜதந்திரி கள் ஊடாகவும் மேற்கு நாடு களில் பிரச்சாரம் செய்கிறது

தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப ஐரோப்பிய நாடு கள் முனைவதற்கு. இந்தியா வும் அதனுடன் நட்பு கொண்டுள்ள சில பொதுஸ் தாபனங்களும் இலங்கை இராணுவத்திற்கு வழங்கி யுள்ள நற்சான்றிதழும் ஒரு காரணமாகும்.

புலிகளுக்கு எதிரான நட வடிக்கைகள் தொடர்பாக இலங்கை இராணுவ அதிகாரி கள் பலர் இந்தியாவுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வருகின்றனர்.

இலங்கை இராணுவத்திற் கும் இந்தியாவிற்கும் இடையி லான உறவின் இறுக்கம் வளர்ச்சியடைவதை பிரேமா விரும்பவில்லை. இவ்வுறவு புலிகளுக்கெதிரான ஒரு கூட்டு மட்டுமல்ல காலப்போக்கில் தனக்கெதிராகவும் திரும்பி விடுமோ என்ற சந்தேகமும் இதற்கு ஒரு காரணம் என வும் கூறப்படுகிறது. (சி)

## மன்னாரில் புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாரம் புலிகள் இராணுவத் தினர் மீதுதொடுத்த தில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் —

நேற்றுமுன்தினம் வடக்கில் மேலும் இரு இடங்களில் இராணுவத்தினர் மீது விடு தலைப்புலிகள் தாக்குதல் தொடுத்தார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

## அரச ஊழியர்க்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து தொழிற்சங் சங்களும் ஏற்கனவே அரசின கவனத்தினதுக் கொண்டுவந் துள்ளன.

இதன் அடிப்படையிலேயே இச்சம்பள உயர்வு வழங்கப் படவுள்ளதாகக் கூறப்படுகி றது. (சி)

## பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டு வழங்கப்பட்ட வெட் டுப்புள்ளி முறையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக் கின் தீர்ப்பு அடுத்த ஜனவரி மாதம் 16ம் திகதி வழங்கப் படலாமென எதிர்பார்க்கப் படுகிறது.

கடந்த 14ம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற்றது. இதன்போது சட்டமா அதிபர் திரு ராஜன் குணசேகரா வழக்கு விசாரணையை ஒத்தி வைக்குமாறு கேட்டுக்கொண் டார்.

இதையடுத்து விசாரணை ஜனவரி 13ம், 15ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வும் தீர்ப்பு பெரும்பாலும் 16ம் திகதி வழங்கப்படலா மெனவும் எதிர்பார்க்கப்படு கிறது. (159-சி)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி றபேக்கா

### 20 - 10 - 1992


புலோலி தெற்கு இன்பம் - தேவேந்திரா தம்பதி களின் செல்வப் புதல்வி றபேக்கா, தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 20ம் திகதி மிகவும் குதூகல மாக தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

றபேக்கா இறைவனின் அருளால் பலகலை பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ, அப்பா, அம்மா அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சின்னப்பம்மா, சவுதி பெரியப்பா, பெரியம்மா குடும்பம், சுவிஸ்மாமா குடும்பம், இந்தியாவிலுள்ள மாமா குடும்பம், ஜேர் மனியில் உள்ள ஆசையப்பா, குட்டிமாமி, சித்திமார், பிரான்ஸ் மாமாமார், அன்ரி குடும்பத்தினர் மற்றும் மாமாமார், மாமிமார், சித்திமார், சகோதரர் கள், சகோதரிகள், மச்சாள்மார், மச்சான்மார், ஆகியோருடன், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றார்கள்.

இன்பம் – தேவேந்திரா தம்பதிகள்

(சி-6603)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மாரிமுத்து கந்தசாமி

(முன்னாள் உரிமையாளர், கண்டியன்ஸ், நியூமார்க்கட், யாழ்ப்பாணம்)

மலர்வு: **09-10-1932**

உதிர்வு: **31-10-1991**

ஒளியாய் வாழ்ந்தீர் என்றும்
அழியா நிலைப்பீர்.

க. வள்ளியம்மை (மனைவி)
க. கலாமோகன் - (மகன் பிரான்ஸ்
க. சாந்தமனோகரி (மகள்)
க. சாந்தகஸ்தூரி (மகள்)

பிடாரி கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(சி-6900)


சுவைத்து மகிழ்ந்திட

ரேஸ்ரியின்

புதிய தயாரிப்புக்கள்



KIDDIES SPECIAL
FRUIT CHOCOLATE

ஒவ்வொன்றினுள்ளும்
அழகிய ஸ்ரிக்கர்கள்

TASTE LINE INDUSTRIES (PVT) Ltd,
14, SEENIOR LANE, JAFFNA.

(ஏ 2513)

★ கிழக்கில் இராணுவம் கெடுபிடி

# அடையாள அட்டைகளுடன் வயல் வேலை செய்யும் தமிழர்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் உள்ள சாகமம் என்ற சிங்களக் குடியேற்றத்தில் 17,000 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

இந்த சிங்கள குடியேற்றத்தை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ் விவசாயிகளுக்கு ஸ்ரீலங்காப் படையினர் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

விவசாயம் செய்ய முற்படுபவர் தம் விவசாயி என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்க நான்கு புகைப்படப் பிரதிகளை ஸ்ரீலங்கா அதிரடிப் படை அதிகாரியின் கையொப்பத்துடன் வைத்திருக்க வேண்டும். இதை வைத்திருந்தால் தான் விவசாயம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டுகிறது.

வயல்வெளிகளில் அத்தாட்சிப்படுத்திய புகைப்படங்கள் வைத்திராதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத்தினர் எச்சரித்துள்ளனர். இந்த அறிவிப்பு தமிழ் விவசாயிகளுக்கு பெரும் துன்பத்தை கொடுத்துள்ளது என்று அறியப்படுகிறது. (சு)

## மகப்பேற்று சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

கைதடி சித்த மருத்துவ போதனு வைத்தியசாலையில் வியாழக்கிழமை காலை வேளைகளில் மகப்பேற்று சிகிச்சை (கிளினிக்) நடைபெற்று வருகிறது.

சித்தமருத்துவத்துறை விரிவுரையாளரும் மகப்பேற்று மருத்துவ நிபுணருமான டாக்டர் திருமதி ஜி. பவானி நோயாளர்களைப் பார்வையிட்டு வருகிறார்.

கடந்த ஒரு வருடகாலமாக இங்கு மகப்பேற்று சிகிச்சைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (154)

## மீண்டும் நெல் விதைப்பு

(கொழும்புத்துறை)

சாவகச்சேரி, தனங்கிழப்பு பகுதிகளில் போககால மழை பெய்யாததாலும் பருவம் தப்பிய மழையாலும் ஏற்கனவே விதைத்த வயல்களை வெள்ளம் மூடியதால் பயிர் முளைகள் அழிந்துவிட்டதால் மீண்டும் உழுது பயிர் விதைக்கப்பட்டன. (154)

## ஓராண்டு நிறைவு விழா

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கிவந்த பெண்கள் பிரிவு கடந்த வருடம் 9-ம் ஆண்டு அக்டோபர் 21-ந் திகதி முதல் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியாக இயங்கி வருகின்றது. இதன் ஓராண்டு நிறைவு விழா நாளை 21-ந் திகதி கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (160)

யாழ். மாவட்டத்தில்

# மலேரியா நோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது மழை காலம் தொடங்கியுள்ளதால் மலேரியா நோய் இப்பகுதிகளில் கூடுதலாகப் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தற்போது அதிகரித்து வரும் நுளம்பு பெருக்கத்தை தடுப்பதற்கு பொதுமக்கள் உடன் நடவடிக்கை எடுத்தால் மலேரியா நோய் பரவாமல் தடுக்க முடியும்.

கடந்த வருடம் மலேரியா நோயினால் யாழ் மாவட்டத்தில் 15 ஆயிரத்து 870 பேரும், கிளிநொச்சிப் பகுதியில் மட்டும் 7417 பேரும் பாதிக்கப்பட்டனர் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளார்கள். (வி)

# வரவு - செலவு திட்டத்தில் பல சலுகைகள்?

(கொழும்பு)

பிரதமர் டி. பி. விஜேதுங்கவினால் நவம்பர் 6-ம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் உத்தேச வரவு-செலவுத் திட்டத்தில் பொது மக்களுக்கு பல சலுகைகள் வழங்கப்படலாம் என நிதியமைச்சு வட்டாரங்கள் கொழும்பில் தகவல் வெளியிட்டுள்ளன.

வரி அமைப்புமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் பல பொருட்கள் மீது விதிக்கப்படும் வரிகள் குறைக்கப்பட விருப்பதாகவும் சில பொருட்களுக்கு மாத்திரம் வரி அதிகரிப்பு ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் நிதித்துறை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

தொடரும் வடக்கு-கிழக்கு யுத்தத்தினுல் பாதுகாப்புச் செலவினம் பெருமளவு அதிகரித்திருப்பதும் இதனால் பொருட்களின் விலைகள் அநாவசியமாக அதிகரிக்கப்பட்டிருப்பதும் தெரிந்தவையே. (க)

உ
சிவமயம்

## சபிண்டீகரண அழைப்பு



**அமரர் செல்லையா தங்கம்மா**

சென்ற 21-09-1992 திங்கட்கிழமை இறைவனடி எய்திய எமது குடும்பத் தலைவி செல்லையா தங்கம்மா (மண்கும்பான் மேற்கு) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள், இன்று 20-10-92 செவ்வாய்க்கிழமை காலை 7-00 மணியளவில் வீட்டிலும், வீட்டுக் கிருத்தியம் 21-10-92 புதன்கிழமை பகல் 12-00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் சமுகமளித்து, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள்
(மண்கும்பான்).

செல்லையா சிவபாதலிங்கம்,
191 H, 218 H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 6905)

★ கொழும்பில்

# 10 லட்சம் ரூபா கொள்ளை
## சப் - இன்ஸ்பெக்டர் தேடப்படுகிறார்

(கொழும்பு)

கொழும்பு-கொள்ளுப்பிட்டி லிப்டன் பிளாஸாவிலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து அண்மையில் பத்து லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக றிசேவ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தேடப்பட்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கொள்ளையின் சூத்திரதாரிகளென வர்ணிக்கப்படும் ஜே. வி. பி. சந்தேகநபர்கள் மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கொடுத்த தகவலின்பேரிலேயே மேற்படி சப் இன்ஸ்பெக்டர் தேடப்படுகிறார்.

அண்மைக்காலமாக தெற்கின் பல பகுதியிலும் ஆயுத முனையில் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் இக் கொள்ளைகளில் இராணுவத்தை விட்டு ஓடியோர் சம்பந்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

வீடமைப்பு

## நிவாரணம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "15 லட்சம வீடமைப்புத்" திட்டத்தின் கீழ் கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 16 பேருக்கு முதற் கட்டமாக இவ் உதவி வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தவா 5 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டு அவற்றுள் முதற் கட்டமாக 2 ஆயிரம் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் த. முருகையாவினால் கடந்த 10ம் திகதி வழங்கப்பட்டது.

இப்பகுதிகளைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஐக்கிய நாணய சங்கங்களின் அனுசரணையுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## சந்திரிகா எம். பியாவதை அநுரா விரும்பவில்லை

(கொழும்பு)

நாடாளுமன்றில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க எம். பி. யாவதை திரு. அநுரா பண்டாரநாயக்கா விரும்பவில்லையாம். இது குறித்து சுதந்திரக்கட்சிக்குள் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

திருமதி சந்திரிகாவை எம். பி. யாக்க சிறிமாவோ பண்டாரநாயக்கா விரும்புவதாகவும் ஆனல் இதனை அநுரா கோஷ்டி எதிர்த்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பண்டாரநாயக்கா குடும்பத் தவரின் பிரச்னை இன்னமும் தீராத நிலையில் கட்சி ஸ்திர மற்றநிலைக்கு செல்வதாக கட்சிப் பிரமுகர்கள் பலர்கவலை தெரிவித்துள்ளனர் (சி)

## பொற்கோவிலைச் சுற்றி படையினர் குவிப்பு

(புதுடில்லி)

பஞ்சாப் பொற்கோவிலை இந்திய பாதுகாப்புப்படையினர் சுற்றி வளைத்துள்ளார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

சீக்கியத் தீவிரவாதிகளின் வன்முறையை அடக்குவதே இதன் முக்கிய நோக்கம் என்றும் இதனுல் சீக்கியத் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை இந்திய அரசாங்கம் பலப்படுத்தி உள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை முன்னுள் இராணுவத் தளபதி அருண் வைத்தியாவைப் படுகொலை செய்த சீக்கியத் தீவிரவாதிகள் தூக்கில் இடப்பட்ட பின்னர் அவர்களின் ஈமச் சடங்குகள் நேற்று பொற்கோவிலில் கடும் பாதுகாப்பின் மத்தியில் இடம்பெற்றதாலேயே இந்தியப்படையினர் பொற்கோவிலை சுற்றி வளைத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

வவுனியாவில்

# இராணுவ இணைப்பதிகாரியுடன் ஆஸி. பிரதி ஸ்தானிகர் சந்திப்பு

(வவுனியா)

இலங்கைக்கான ஆஸ்திரேலிய பிரதி உயர் ஸ்தானிகர் திரு. ஸ்ததனி கௌவ்பக்ஷி கடந்த சனிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்து இராணுவ இணைப்பதிகாரியைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது பற்றியும் இவர்களை இப்பகுதியில் குடியமர்த்துவதும் குறித்தே இப்பேச்சுக்கள் இடம்பெற்றன.

பிரதி ஸ்தானிகர், வவுனியாவில் அரசாங்க அதிபர், சிவில் நடவடிக்கை தொடர்பான உயர் அதிகாரிகள் பலரையும் சந்தித்து பல விடயங்களையும் திரட்டியுள்ளாராம். (சி)

வார இறுதியில்

# செஞ்சிலுவைக்குழு வலி-வடக்கு செல்கிறது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வலி-வடக்கிற்கு இவ்வார இறுதிப்பகுதியில் மீண்டும் செல்லவிருக்கின்றனர். மாதகல், இளவாலை, சில்லாலை, அளவெட்டி வடக்குப் பகுதிகளுக்குச் சென்று இங்கு வர விருப்பம் தெரிவித்தோரையும், பாதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகளையும் அழைத்து வர உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமணகப்பலில் வார இறுதிப் பகுதியில் பலாலி சென்று மேற்படி இடங்கட்கு செல்வர் எனத்தெரிவிக்கப்படுகிறது. (56)

# ★ நாட்டினுள் 44 எய்ட்ஸ் நோயாளிகளை சுகாதாரத் திணைக்களம் தேடுகிறது

(கொழும்பு)

இலங்கை சுகாதாரத் திணைக்களத்தினர் 44 எயிட்ஸ் நோயாளிகளை நாடுமுழுவதிலும் தேடி வருகின்றார்கள் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் அநேகம்பேர் தற்போது இலங்கையில் தங்கியுள்ளார்கள் என்றும் வெளிநாட்டில் இருந்து வரும் உல்லாசப் பயணிகளால் இலங்கையில் அதிகமாக எயிட்ஸ் பரவுகிறது என்றும் சுகாதார திணைக்கள செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் பலர் அங்கிருந்து நாடு திரும்பும் எய்ட்ஸ் காவிகளையும் சுமந்து வருவதாகவும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. (சு-சி)

# 'குமண' கப்பல் இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

423 தபால் பொதிகளுடன் குமண கப்பல் இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறைக்கு வருகின்றது.

இக்கப்பலில் 1 000 மெற்றிக் தொன் அரிசி, 750 மெற்றிக் தொன் சீனி, 50 மெற்றிக் தொன் பருப்பு, 10 மெற்றிக் தொன் மலலி, 2 மெற்றிக் தொன் தீப்பெட்டி, 2 மெற்றிக் தொன் வெந்தயம் உட்பட வேறு பொருட்களும் வருகின்றன.

மேலும் இக்கப்பலில், யாழ். போதனு வைத்தியசாலை, யாழ். மாநகரசபை, சிறுவர் பாதுகாப்பு நிதியம், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு மருந்து வகைகளும் வருகின்றன

மேற்படி கப்பலில் கொண்டு வரப்படும் சீனி, தீப்பெட்டிகளினுல், தற்போது யாழ். மாவட்டத்தில் நிலவி வரும் சீனி, தீப்பெட்டித் தட்டுப்பாடு ஓரளவு நீங்கிவிடும் என்று யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்

கப்பலில் இருந்து பொருட்களை இறக்கும் பணி உடனடியாக ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (வி-56-157)

## மேஜர் முரளி நினைவு விளையாட்டுவிழா இறுதிப்போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

மேஜர் முரளி நினைவு விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறுகிறது.

வலைபந்தாட்டம். கயிறிழுத்தல் (ஆண்கள், பெண்கள்) போட்டிகள் காலை 9-00 மணிக்கு சுன்னுகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். 11, 13 வயது ஆண் / பெண்களின் 100 மீ இறுதிப் போட்டியும் இங்கு நடைபெறும்.

பி. ப. 4-00 மணிக்கு உதைபந்தாட்ட இறுதிப்போட்டி மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும்.

## வேலணை கோட்டத்தின் கீழ் கெற்பெலி பண்டிதர் குடியிருப்பு மாணவர்கள்

(ஆனைப்பந்தி)

கெற்பெலி பண்டிதர் குடியிருப்பில் தங்கியுள்ள தீவக மாணவர்களுக்கான கல்விச் சேவை தற்போது வேலணை கல்விக் கோட்டத்தினுல் நிர்வகிக்கப்படுகின்றது. இதுவரை காலமும் சாவகச்சேரி கல்விக்கோட்டத்தினுலேயே தீவக மாணவர்களுக்கான கல்விச்சேவை நிர்வகிக்கப்பட்டு வந்தது.

இம்மாதம் 15-ந் திகதி முதல் வேலணை கல்விக் கோட்டம் அதனைப் பொறுப்பேற்று தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து ஆசிரியர்களினுல் மேற்படி மாணவர்களுக்கு கல்வி அளிக்கப்படுகின்றது. (101)

## பாவனைக்கு உதவாத உலர் உணவுகள்

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு பாவனைக்கு உதவாத உலர் உணவுகளை வழங்கி வருகிறது.

இன்பருட்டியில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளை மூலம் 400 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சீனிக்குப் பதிலாக வழங்கப்படும் கௌப்பி, உழுந்து, கடலைப்பருப்பு, உழுந்து புழுக்கூடுகட்டியதாகவும் பாவனைக்கு உதவாததாகவும் உள்ளது.

இச்சங்கம் கொள்வனவு செய்த விற்பனைசெய்யமுடியாமல் தேங்கிக்கிடந்த மேற்படி உணவுப் பொருட்களை தற்போது இடம்பெயர்ந்தவர்களது உலர் உணவாக வழங்கி வருகிறது. இவ் உணவுப் பொருள்களை உண்பதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் சாத்தியக்கூறுகளும் தென்படுகின்றன. (150)

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த ஏற்பாடு

(உடுப்பிட்டி)

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த யாழ். மாவட்டகமநலசேவைப் பகுதி நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

தற்போது காலபோக வேளாண்மை ஆரம்பித்துள்ளமையால் பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தும் கால்நடைகளை கட்டாக்காலியாக விடாமல் மேய்ச்சல் தரைகளில் விட்டோ அல்லது கட்டி வைத்தோ மேய்க்குமாறு கமநலசேவை திணைக்களம் அறிவித்துள்ளது.

பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் கால்நடைகளை பிடிப்பதற்கும் ஏலத்தில் விடுவதற்கும் நடவடிக்கைகளை கமநல சேவை பகுதி எடுக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

## குமாரியும் வருகிறது

[திருநெல்வேலி]

மன்னருக்குச் சென்ற குமாரிக் கப்பல் திருகோணமலை சென்றுள்ளது. அங்கிருந்து 750 மெற்றிக் தொன் சீனியையும், 650 தொன் மாவையும் மற்றும் பல பொருட்களையும் ஏற்றி நாளை புதன்கிழமை அங்கிருந்து இங்குவந்து சேருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை கப்பல் வந்தடைந்ததும் சீனித்தட்டுப்பாடு நீங்குமெனவும் தெரிவிக்கப்பட்டுவதது. (157)

## யாழ்-லங்கா சித்தஆயுர்வேத கல்லூரியை அரசு பொறுப்பேற்கும்

(வேலணை)

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியை அரசு பொறுப்பேற்று நடத்த முன்வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இக்கல்லூரியை அரசு பொறுப்பேற்று நடத்தவேண்டும் என வைத்தியக கல்லூரியின் தற்போதைய அதிபர் கலாநிதி சுகந்தன் இன்னுசித்தம்பி யாழ் அரசாங்க அதிபர் ஊடாக அரச அதிகாரிகளைக் கேட்டிருந்தார்.

யாழ் அரசாங்க அதிபர் இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன் பேரில் வடக்கு கிழக்கு மாகாண அரசின் மற்று முறை மருத்துவ பிரதிப் பணிப்பாளர் பூ உரோமநேசன் யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு இக்கல்லூரியை அரசுடன் இணைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு கல்லூரியின் தற்போதைய முழுவிபரங்களையும் உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டிருக்கின்ருர். (75)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான புரட்டாதி மாதச் சம்பளம் இன்று முதல் நாவலர் வீதியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் வழங்கப்படும்.

## தீவுப்பகுதி தபால்கள்

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் தீவுப்பகுதிக்கான தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. அதேவேளை தீவுப்பகுதியிலிருந்தும் தபால்கள் எடுத்து வரப்படவுள்ளன. இத்தகவலை வடபிராந்திய தபால் அத்தியட்சகர் எஸ் எம். சேதுகாவலர் நேற்றுத் தெரிவித்தார்.

குமாரியில் ஏனைய இடங்களுக்கான தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படமாட்டா எனவும் அவர் கூறினர். (159)

## புலிகளுடனுன

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு உயர்நிலைமாநாட்டிலேயேஅவரது இக்கோரிக்கை சகல தளபதிகளுக்கும் விடுக்கப்பட்டது.

கூட்டுப்படைத் தலைமையகத்துக்கும் முப்படைத் தளபதிகளுக்குமிடையில் நிலவும் பெரும் முரண்பாடு புலிகளுடனுன யுத்தத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென பல அதிகாரிகள் அரசை எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் படைத்தளபதிகள் கூட்டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுடனும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்காவுடனும் ஒத்துப்போகுமாறும் போர் நடவடிக்கைகளை அனைவரதும் ஒத்துழைப்புடனும் மேற்கொள்ளுமாறும் சகல தளபதிகளையும் ஜனுதிபதி பிரேமதாஸா கேட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## யுத்த விமானங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளதாகவும் தற்போது விமானப்படை வசமிருக்கும் விமானங்கள், ஹெலிகொப்டர்களுக்கான உதிரிப்பாக கொள்முதலும் இடம்பெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## புலிகளிடம் சிக்கிய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

60 மி. மீ. மோட்டர்-1, ரி-56 ரக துப்பாக்கிகள்-8, ஜி-3 ரக துப்பாக்கி-1, நடுத்தர ரவைகள்-8000, 60 மி. மீ. எறிகணைகள்-12, 40 மி. மீ. எறிகணைகள்-18, பி.கே.லிங்குடன் ரவைகள்-585, றம் மகசீன்-1, ஏ. கே. எல். எம். ஜி. லிங்குடன்-350, ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர்-1, ரி. 56 ரக மகசீன்-47, ரி-81 ரக மகசீன்-8, ஜி-3 ரக மகசீன்-1, ரி-81 ரக றைபிள் லிங்-1, ஜே.ஆர். கைக்குண்டுகள்-18, தொலைத் தொடர்பு சாதனம் 1, சிப் பற்றறி-2, செயின் கிரனேட்-5, ஹெல்மட் 10, தண்ணீர் ராங்க்-20, தண்ணீர் ராங்க் கோல்சர்-19, மலறி பெல்ற்-14, மில்ற்ரறி சப்பாத்துகள்-20 சோடி, பிற சப்பாத்துகள்-19 சோடி, ஏ கே. கோல்சர்-20, ஏ. கே ஜசன் கோல்சர்-2, ரி-81 பைனெட் 2, கமரா-1, ராணுவ சீருடை 42, சாதாரண தொப்பி-8, சோல்டர் பாக்-19. மழைக் கோட்-5. (வே)

## மறியல் போர் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் கூட்டுறவுச் சங்கங்களின் பணத்தை மக்கள் வங்கிகள் வைப்பில் ஏற்காததைக் கண்டித்து நேற்று 19 ந் திகதி யாழ்ப்பாண மக்கள் வங்கி பிராந்திய அலுவலகத்தில் நடைபெற விருந்த மறியல் போராட்டம் பின்போடப்பட்டுள்ளது.

மேற்படி மறியல் போராட்டம் சம்பந்தமாக ப. நோ. கூ. சங்கப் பிரதிநிதிகளுக்கும், வங்கிப் பிராந்திய முகாமையாளருக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த மறியல் போராட்டம் இம்மாதம் 31-ந் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது [வி-156]

## கடத்தல் தங்கம் சிக்கியது

(டாக்கா)

பங்களாதேஷில் சுங்க அதிகாரிகள் 65 கிலோ கடத்தல் தங்கத்தை கைப்பற்றி உள்ளார்கள்

இதன்பெறுமதி 8 லட்சம் டொலர்களாகும். இது பங்களாதேசின் பெரும் கடத்தல் நடவடிக்கை என்று கூறப்படுகிறது.

டாக்கா விமான நிலையத்தின் களஞ்சியப் பகுதியில் இந்தத் தங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. சிங்கப்பூரில் இருந்து பிரயாணிகளுடன் கொண்டு வரப்படாத பொதியாக அங்கு இதுபோய்ச் சேர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது (சு

## இன்று

(திருநெல்வேலி)

பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் இன்று 20-10-92 செவ்வாய் காலை 8-30 முதல் சனிக்கிழமை 24-10-92 வரை நடைபெற உள்ளதாக யாழ்ப்பாணக் கோட்டம் அறிவித்துள்ளது.

தமிழ், சமூகக்கல்வி, வரலாறு, சமயம், ஜேர்மன்கத்தோலிக்கம் ஆகிய பாடங்களை ஆண்டு 6 முதல் 11 வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கே இப்பயிற்சி வகுப்புக்கள் யாழ். இந்துக்கல்லூரியிலும் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (157)

## பொலநறுவை

.... தொடர்ச்சி

ஜனுதிபதிபிரேமதாசா நேற்று நேரில் விஜயம் செய்தார்.

இவருடன் திருமதி பிரேமதாஸாவும், திரு பிரட்மன் வீரக்கோனும் மற்றும் இராணுவ அரசு அதிகாரிகளும் இககிராமங்களை பார்வையிட்டனர்.

இப்பகுதி கிராமங்களுக்கான பாதுகாப்பை உடனடியாக பலப்படுத்துமாறும் ஜனுதிபதி உத்தரவிட்டார். [சி]

## விளாத்திக்குளம் புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

தியாகி திலீபனின் 5-ம் ஆண்டு நினைவையொட்டி விளாத்திக்குளம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக வவுனியாக் கோட்டத்தினுல் புனரமைக்கப்பட்டது.

இக்குளத்தின் கீழ் உள்ள மொத்தக்காணி 100 ஏக்கர் ஆகும். இச்சிரமதான வேலைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரும் முத்துமாரிநகர், புதூர் சந்தி மக்களும் இணைந்து மேற்கொண்டனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336 / 81